## மக்களுக்குத் தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து

# இந்தியாவே திரும்பிப் பார்க்கும் முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

## முகவை மண்டலக் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆய்வுக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**இராமநாதபுரம், டிச.30-**

**மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து அறிவித்து, இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கும் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தமது உரையில் குறிப்பிட்டார்.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணியின் முகவை மண்டல மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகளுக்கான ஆய்வுக்கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் (28/12/2024) சனிக்கிழமை, இராமநாதபுரத்தில் உள்ள ஜே.பி.ஆர் மஹாலில் நடைபெற்றது.**

**இதில் கலந்துகொண்டு அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரை யாற்றினார்.**

**அவரது உரை வருமாறு:-**

"தகவல் தொழில் நுட்பம் என்பது கடந்த சில ஆண்டுகளாக மிக முக்கியத்துவம் ஒன்றாக மாறிக் கொண்டிருக்கிறது. அதுவும் சமூக ஊடகங்கள் என்று வரும்போது ஒரு கருத்தியலையே மாற்றக் கூடிய, ஒரு தேர்தலையே மாற்றக் கூடிய வலிமையுள்ளதாக மாறியிருப்பதை இப்போது நாம் பார்க்க முடிகிறது.

முதன் முதலில் இதை தேர்தலில் பயன்படுத்தி வெற்றி பெற்றது ஒபாமா அவர்கள். அது ஒரு நல்ல வெற்றி. அதன் பின் இங்கே தேசிய அளவில் நடைபெற்ற தேர்தலில் பாஜக தகவல் தொழில் நுட்பத்தையும், சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி பெரிய வெற்றியை பெற்றது. அது எப்படிப்பட்ட வெற்றி என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த வெற்றி தமிழ்நாட்டை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்றால்... எனக்கு நாடாளுமன்றம் மீண்டும் செல்லவே பயமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் நேற்று நடந்ததே ஒன்று, அதைப் பார்த்து தமிழ்நாட்டில் இது வழக்கமாக நடப்பதுதான் என்று சிலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். எனக்குப் புரியவில்லை. காலையில் எழுந்ததும் நாமெல்லாம் சாட்டையால் இரண்டு அடி அடித்துக் கொண்டா வெளியே போகிறோம்?

நான் உனக்காக வெட்கப்படுகிறேன் என்று ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. நமக்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை... இங்கே இருக்கும் யாருக்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனாலும் அவர்களுக்காகவும் சேர்த்து நாம் வெட்கப்பட வேண்டிய வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைக்கு நம்மை கொண்டு நிறுத்தியிருக்கிறார்கள். வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

**பொய்களின் தொழிற்சாலை பா.ஜ.க.**

இன்று அந்த பாஜகவின் வெற்றி என்பதை, அந்த வெற்றிக்குப் பின்னால் எத்தனை பொய்கள் இருந்தது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். பொய்களை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையாகத்தான் அவர்கள் செயல்படுகிறார்கள். எந்த சரித்திர நிகழ்வாக இருக்கட்டும், எந்த அரசியல் நிகழ்வாக இருக்கட்டும்... கொஞ்சம் கூட வெட்கப்படாமல் இவ்வளவு தவறாக சொல்கிறோமே என்ற உணர்வே இல்லாமல் அந்த நிகழ்வையே மாற்றி ஒரு செய்தியை பரப்பும் அளவுக்கு, மக்களிடையே வெறுப்பைப் பரப்பி பிரிவினை ஏற்படுத்தும் அளவுக்கு சரித்திரத்தை மாற்றி, திரித்து இன்று வரை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதை அவர்கள் தகவல் தொழில் நுட்பம் வழியாக மட்டும் செய்யவில்லை, நாடாளுமன்றத்தில் பேசினாலும் அதே பொய்தான். ஏனென்றால் இந்த நாட்டின் நிதித்துறை அமைச்சர் பேசும்போது பட்ஜெட்டை பற்றி பேசுகிறாரோ இல்லையோ, 'என்னை இந்தி படிக்கவிடவில்லை' என்பதை திரும்பத் திரும்ப சொல்லுவார். ஆனால் அவர் இந்தி படித்ததையும் இணையத்தின் வழியாகத்தான் நாம் தெரிந்து கொண்டோம்.

இப்படி தொடர்ந்து தவறான தகவல்களை பொய்களை பரப்பிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு இயக்கத்தை எதிர்த்து நாம் நின்று கொண்டிருக்கிறோம் . ஏன் இங்கே இருக்கிற அ.தி.மு.க.வை விட்டுவிட்டு பா.ஜ.க.வை பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன் என்று கேட்டால்.. இவர்கள் நமது கொள்கை எதிரிகள்.

**நாட்டின் கருத்தியலை உருவாக்கும் முதல்வர்!**

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று தன்னை ஒரு மாநிலக் கட்சியாக நினைத்துக் கொள்ளக் கூடிய இடத்தில் இல்லை. தலைவர் கலைஞர் இந்த நாட்டின் தலைவர்களை, இந்த நாட்டின் ஆட்சியை நிர்ண்யிக்கும் இடத்தில் இருந்தார். இன்று நமது தலைவர் முதல்வர் அண்ணன் தளபதி இந்த நாட்டின் கருத்தியலையே உருவாக்கும் இடத்திலே இருக்கிறார்.

இந்த நாட்டில் ஒரு கருத்தியலை பேச வேண்டும், அதை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தின் முதல்வர் என்ன சொல்கிறார் என்றுதான் இந்த நாடு இன்று திரும்பிப் பார்க்கிறது. அந்த அளவுக்கு முக்கியமான இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நின்று கொண்டிருக்கிறது. அதனால் இந்த நாட்டை வழிநடத்தும் கடமை, கடப்பாடு நம் அத்தனை பேருக்கும் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதனால் உங்கள் பணிகள் தமிழ்நாட்டுக்குள், தமிழர்களின் எல்லைக்குள் முடங்கிவிடக் கூடியதல்ல., அதையும் தாண்டி இந்த நாட்டைக் காப்பாற்றும் கடப்பாடும் நமக்கு இருக்கிறது.

**திராவிடத்தால்தான் வாழ்கிறோம்!**

தமிழ்நாட்டில், 'திராவிடத்தால் வீழ்ந்தோம்... ' என்று ரொம்ப நாளாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ்நாட்டை விட்டு வேறு மாநிலங்களுக்கு சென்று நாம் பார்க்கும்போதுதான், தமிழ்நாடு எப்படி தலைநிமிர்ந்து நிற்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

நான் கூட எனது தூத்துக்குடி தொகுதியில் அங்கன்வாடிகளை ஆய்வு செய்யப் போகும்போது இது சரியாக இல்லை, இடம் பத்தலை, ஜன்னல் சரியாக இல்லை, பாத் ரூம் படி வைக்கல இப்படினு எல்லாரையும் ஆயிரம் கேள்வி கேட்பேன். ஆனால் மற்ற மாநிலங்களில் இருக்கும் அங்கன்வாடிகளை சென்று பார்க்கும்போதுதான் தெரிகிறது. நான்கு நான்கு அடி, அல்லது ஆறுக்கு ஆறு அடி இருக்கும்... அதில் ஜன்னல் கிடையாது. இருட்டறை, ஊரில் இருப்பவர்கள் டிரம்களை கொண்டு வந்து வைத்திருகிகிறார்கள். அந்த இடம் போக மீதி இடத்தில்தான் குழந்தைகள் இருக்க வேண்டும், விளையாட வேண்டும். இதைப் பார்த்த பிறகுதான், நாம் இன்று எந்த இடத்திலே இருக்கிறோம், திராவிடத்தால் தமிழ்நாடு எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், திராவிடம் இல்லாததால் அவர்கள் எப்படி வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது. இது ஒரே ஒரு உதாரணம்தான்.

கல்வியாக இருந்தாலும் சரி, மருத்துவ வசதியாக இருந்தாலும் சரி... இந்த சமூகத்தில் எல்லா சமுதாயங்களுக்குமான வாய்ப்புகளாக இருக்கட்டும், மத நல்லிணக்கமாக இருக்கட்டும், சாலை வசதிகளாக இருக்கட்டும் , தொழில் நுட்பமாக இருக்கட்டும், தொழில் துறையாக இருக்கட்டும்... எல்லாவற்றிலும் தமிழ்நாடு வளர்ந்து இவ்வளவு கம்பீரமான இடத்தில் இருக்கிறது என்றால் அது திராவிடத்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் என்ற பெருமை நமக்கு இருக்கிறது.



**பொள்ளாச்சியில் தெரிந்தது அ.தி.மு.க.வின் லட்சணம்!**

மற்ற மாநிலங்களில் எல்லாம் பெண்களுக்கு பாதுகாப்பே கிடையாது. இங்கே நடக்கக் கூடாத ஒரு சம்பவம் நடந்தால் கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கட்சி பாரபட்சம் இல்லாமல் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார். சம்பவம் நடந்து அது வெளியே வருவதற்குள் தவறு செய்தவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆனால் பொள்ளாச்சியில் நடந்த சம்பவங்களைப் பார்த்தோம். யார் மீதும் நடவடிக்கை இல்லை. அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். அதிமுகவின் லட்சணம் அதுதான். திமுக ஆட்சி வந்த பிறகுதான் அந்த பெண்களுக்கு நியாயம் கிடைக்கும் அளவிலே கைதுகள் நடைபெற்றன.

ஆனால் இன்று ஏதோ மக்கள் மீது பெண்கள் மீது அக்கறை இருப்பவர்கள் போல அவர்கள் நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவத்தில் ஈடுபட்ட இதே ஆள் 2014 இல் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டு, கழுத்தில் இருக்கும் சங்கிலியையும் பறித்திருக்கிறார். ஆனால், வழக்கு பதிவு செய்யப்பட்டது, எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது திருட்டுக் குற்றத்துக்கு மட்டும்தான். அப்போதே அந்த ஆட்சியிலேயே கேஸ் ஒழுங்காக பதியப்பட்டிருந்தால், அவர் மீது காவல் துறையின் பார்வை இருந்திருக்கும். இப்படி நினைத்த நேரத்தில் ஒரு கல்லூரிக்குள் போய்விட்டு வரக் கூடிய வாய்ப்பு இருந்திருக்காது. இந்த தவறை அப்போதே நம்மால் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர்கள்தான் இன்று முதல்வர் நடவடிக்கை எடுத்த பிறகும் கல்லூரி வாசலிலே நின்று நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

**தகவல் தொழில் நுட்ப அணிக்கு கடமை - பொறுப்பு அதிகம்!**

இப்படிப்பட்ட பொய்களை புனைசுருட்டுகளை நாடகங்களை வெளிப்படுத்த வேண்டிய, தோலுரித்துக் காட்ட வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது.

ஏனென்றால் உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. சினிமா பார்ப்பதற்கு கூட தியேட்டருக்கு போய் பார்க்க யாருக்கும் பிடிப்பதில்லை. ஓடிடியில் வந்துவிடும் வெயிட் பண்றேன் என்று சொல்லும் நிலைக்கு வந்துவிட்டோம். எல்லாமே வீட்டுக்குள். வொர்க் ஃப்ரம் ஹோம் என்று ஆகிவிட்டது. சாப்பாடு வேணுமா ஆர்டர் போடுங்க... வேறு ஏதேனும் பொருள் வேண்டுமா... ஆர்டர் போட்டால் வாசலுக்கே வந்து கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே வீட்டை விட்டே வெளியே செல்ல வேண்டாம் என்ற நிலை.

இந்த நிலையில் ஒரு கூட்டம் போட வேண்டும் என்றால்... அங்கே போய் உட்கார்ந்து பார்க்க வேண்டுமா, நான் யு ட்யூபிலே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்ல கூடிய மனநிலை உருவாகி வரும் இந்த சமூகத்திலே... தகவல் தொழில் நுட்ப அணியின் பொறுப்பு, கடமை, முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிறது என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**மகளிரணியைத் தாண்டியும் தகவல் தொழில் நுட்ப அணி!**

பொதுவாக மகளிர் அணியில் இருக்கக் கூடிய பெண்கள் வீட்டிலே இருக்கக் கூடிய சமையலறை வரை சென்று பெண்களிடம் பேச முடியும் என்று சொல்லுவோம். அதைத் தாண்டி தகவல் தொழில் நுட்ப அணி ஒவ்வொருவரின் கைக்குள்ளும், மனதுக்குள்ளும், மூளைக்குள்ளும் செல்லக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்கள் நீங்கள்.

நம்முடைய முதல்வர் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கியபோது மிகப்பெரிய அளவுக்கு அது வைரல் ஆச்சு. அதற்குக் காரணம் இங்கே இருக்கக் கூடிய சகோதரர்களும், சகோதரிகளும்தான். அதேபோல உங்கள் கொள்கை உறுதியை நான் நிச்சயமாக இங்கே பாராட்ட வேண்டும்.

மகாவிஷ்ணு என்ற ஒருவர் பள்ளி மேடையில் அரிய பெரிய கருத்துகளை சொன்னார். அப்போதே அவரை தோலுரித்துக் காட்டியது, பஞ்சிலே பண்ணிய சாட்டையாக இல்லாமல் உண்மையான சாட்டையாக அவரை அடித்துக் காட்டியது திமுகவின் தகவல் தொழில் நுட்ப அணிதான். யார் தவறு செய்தாலும் பாரபட்சம் இல்லாமல் கேள்வி கேட்க கூடிய அணி தகவல் தொழில் நுட்ப அணிதான். கொள்கையை எந்த காலத்திலும் விட்டுக் கொடுக்காத அணி.

அதோடு மட்டுமல்லாமல்... எனக்கு ஒரு மகிழ்ச்சி என்ன்வென்றால் மகளிரணியை தவிர ஒரு சில அணிகளில் தான் இவ்வளவு பெண்கள் இருப்பார்கள். இந்த அணியில் இவ்வளவு அதிக சகோதரிகளைப் பார்ப்பதே எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை, நம்பிக்கையை தரக்கூடியதாக இருக்கிறது.

டி.ஆர்.பி.ராஜாவை சின்ன வயதில் இருந்தே, அவர் பள்ளியில் படிக்கும் காலகட்டத்தில் இருந்தே அவரை எனக்குத் தெரியும். சரியாக வளர்த்திருக்கேன் என நினைக்கிறேன். ஏனென்றால் பெண்கள் மீது எப்போதுமே மரியாதையும் , பெண்கள் ஆண்களுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும், வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என்று நினைக்கக் கூடிய ஓர் இளைஞர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள்.

**நம்மை எதிர்க்கும் யோக்கியதை யாருக்கும் இல்லை!**

நமது சகோதரிகள் பதிவிடும்போது அதற்கு பதில் வேறு விதமாக வரும். உங்களுடைய கருத்துகளை ஆணித்தரமாக பதிவிடும்போது, உங்களது தன்னம்பிக்கையை உடைப்பதற்காக உங்களை முடக்கிவிடலாம் என்று முயற்சிக்கும் அளவுக்கு தனிப்பட்ட கருத்துகளை அவர்கள் பதிவு செய்வார்கள்.

நான் உங்களுக்கு சொல்லும் ஒரே ஒரு விஷயம் இதுதான். இந்த உலகத்தில் உங்களை ஜட்ஜ் பண்ணுவதற்கு,. நீங்கள் யார் என்று சொல்லுவதற்கு யாருக்கும், எவனுக்கும் எவளுக்கும் உரிமை கிடையாது... அந்த உரிமை உங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. அதனால் நீங்கள் யாருக்கும் தீக்குளித்து காட்ட வேண்டிய அவசியம் இல்லை. நம்மைப் பற்றி யார் என்ன சொன்னாலும் அதைத் தூக்கி எறிந்து விட்டு உங்களுடைய கருத்துகளை நேர்மையாக, தைரியமாக பதிவு செய்யுங்கள். ஏனென்றால் இத்தனை பேர் இருக்கிறோம் உங்களுக்காக!

நம்மைப் பற்றி பேசும் யாருக்கும் நம்மைப் பற்றி பேசும் அளவுக்கு யோக்கியதை இல்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த சமூகம் இன்னும் பெண்களை மதிக்கத் தொடங்கவில்லை. திரும்பத் திரும்ப பெண்களை தீக்குளிக்க அனுப்பி சோதித்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த காலம் எல்லாம் போய் விட்டது. நீங்கள் சுதந்திரமாக, நீங்கள் நினைத்தபடி வாழும் சமூகத்தை உருவாக்க வேண்டும், உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதனால் எந்த வித அச்சுறுத்தலுக்கும் பலியாகாமல் தலைநிமிர்ந்து நில்லுங்கள்.

திராவிட இயக்கம் என்பது தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், தலைவர் கலைஞரின் இயக்கம். இன்று அண்ணன் தளபதி வழி நடத்தக் கூடிய இயக்கம். பெரியாரின் பெண்ணியக் கருத்துகளை போல சொல்வதற்கு இங்கே யாரும் இல்லை. எது உனக்கு தடையாக இருக்கிறதோ அதை உடை என்று பெண்களுக்கு சொன்ன தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அதற்குப் பின் பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் கல்வி வளர்ந்தது.

**புதிய கல்விக் கொள்கையை நாம்தான் கொண்டு வரவேண்டும்!**

புதிய கல்விக் கொள்கையை கொண்டுவருவதாக பாஜக சொல்லுகிறது. அவர்களுக்கு கல்வியைப் பற்றி ஒன்றுமே தெரியாது. கல்வியை பற்றி தெரியாதவர்கள் கல்விக் கொள்கையை கொண்டு வரக் கூடாது. இன்னும் 30 வருடம் கழித்து 50% பேராவது உயர் கல்வியை அடைய வேண்டும் என்ற அவர்களது இலக்கை, என்றோ தாண்டி நிற்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு.

தமிழ்நாட்டில்தான் தலைவர் கலைஞர் சின்னச்சின்ன கிராமங்களில் இருப்பவர்களுக்கும் கல்வி வாய்ப்பு மறுக்கப்படக் கூடாது என்பதற்காக எல்லா இடங்களிலும் கல்லூரியைத் தொடங்கினார். அதனால்தான் இந்திய மாநிலங்களிலேயே பெண்கள் அதிகமாக உயர் கல்வி கற்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் எல்லா அளவீடுகளையும் தாண்டி தமிழ்நாடு பெண் கல்வியில் உயர் கல்வியில் உயர்ந்து நிற்கும்.

நமது தமிழக முதல்வர் தளபதி புதுமைப் பெண் என்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் வழியாக கல்லூரியில் படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. வீட்டில் யாரையும் கேட்க வேண்டாம்,. யாருக்கும் தொல்லை கொடுக்கிறோம் என நினைத்து படிப்பை நிறுத்த வேண்டாம், எந்த விதமான கஷ்டத்தையும் நீங்களும் பட வேண்டாம், யாருக்கும் கொடுக்க வேண்டாம்... நான் இருக்கிறேன் உங்களோடு என்று நம்முடைய முதல்வர் அண்ணன் அளித்த திட்டம்தான் புதுமைப் பெண். இன்று அது தமிழ்ப் புதல்வனாக இளைஞர்களுக்கும் வழங்கப்படுகிறது. ஒரு சகோதரனாக, தந்தையாக நமது முதல்வர் தந்திருக்கும் திட்டம் இது.

ஆண்களும் பெண்களும் இந்த சமூகத்தில் தலை நிமிர்ந்தவர்களாக, ஒருவருக்கொருவர் இணையானவர்களாக... எந்த சமூகத்துக்கு வழிவழியாக கல்வி மறுக்கப்பட்டதோ அந்த சமூகத்து பிள்ளைகள் படித்து மரியாதைக்குரிய இடங்களில் அமர வேண்டும் என்ற கனவு கண்டு, தனது ஆட்சிக் காலத்திலே தொடக்கப் புள்ளி வைத்தார் அண்ணா.

தலைவர் கலைஞர் ஆட்சியில் முதல் தலைமுறை பட்டதாரிக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், பெண் பிள்ளைகள் பத்தாவது படித்தால் போதும், திருமண உதவித் தொகை என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார். இதன் மூலம் பெண்கள் பத்தாவது வரைக்குமாவது படிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்.

அடுத்து நம்முடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள் கிராமத்துப் பிள்ளைகள் கல்லூரி சென்று படிக்கட்டும் நான் தருகிறேன் மாதம் ஆயிரம் ரூபாய் என்று கல்வியை பிள்ளைகளுக்கு தந்திருக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறார். புதிய கல்விக் கொள்கையை நாம் தான் கொண்டுவரவேண்டும்!

**வளர்ந்த மாநிலங்களில் கூட தமிழ்நாட்டின் திட்டங்கள் கிடையாது!**

திராவிட இயக்கம் என்பது மாபெரும் தொடர்ச்சி, ஒவ்வொரு திட்டமும் இந்த சமூகத்தை மாற்றிப் போடக் கூடிய தொடர் திட்டங்கள். இதுபோன்ற திட்டங்கள் அமெரிக்காவில் கூட கிடையாது.

மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டம் உலகில் வேறு எங்கும் கிடையாது. டாக்டர்களுடைய அப்பாயின்ட்மென்ட் வாங்க பல வளர்ந்த நாடுகளில் கூட காத்திருக்க வேண்டும். ஆனால் டாக்டர்கள் உங்களிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கி வீட்டுக்கு வந்து சிகிச்சை தரக் கூடிய மாநிலம் தமிழ்நாடு, இதுதான் திராவிட மாடல் ஆட்சி நடக்கும் தமிழ்நாடு.

நீங்கள் பொதுக்கூட்டம் போட வேண்டாம். உங்கள் போனை எடுத்து ரெக்கார்டரை பிரஸ் பண்ணிட்டு, அதுல பேசுங்க. நம்முடைய சாதனைகள் என்ன, சாதனைகளின் வரலாறு என்ன, அதன் பின்னால் இருக்கும் தியாகம் என்ன என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு பேசுங்கள்.

நீங்கள் கன்டென்ட் க்ரியேட்டராக மாற வேண்டும். நீங்களே கன்டென்ட் உருவாக்க வேண்டும். ராஜா சொன்னார் அல்லவா... திமுகவில் இருப்பவர்களிடம் கன்டென்ட் நிச்சயமாக இருக்கும். அது இல்லாதவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை நாம் பார்த்து விட்டோம்.

அதனால் சரித்திரம் இருக்கக் கூடியவர்கள் நாம். நம்முடைய தியாகங்களை, நம் தலைவர்களின் வரலாறை, நம்முடைய திட்டங்களுக்கு பின்னால் இருக்கக் கூடிய புரட்சிகரமான கருத்துகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல கூடிய கடப்பாடு உங்கள் கைகளில் இருக்கிறது.

இது தேர்தலுக்கான பணி மட்டுமல்ல... தமிழ்நாட்டை, இந்தியாவை காப்பாற்றும் பணி. அதற்கு அச்சாரம் தான் வரக் கூடிய தேர்தல் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் நேரத்தில் மட்டுமல்ல.,... தொடர்ந்து நம்முடைய கருத்துகளை திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். நம் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக பதில் தந்துகொண்டே, விளக்கங்கள் தந்துகொண்டே இருக்க வேண்டும். உங்கள் அத்தனை பேருக்கும் வாழ்த்துகள்" இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை யாற்றினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, திரு.ஜி.வி.மார்கண்டேயன், முருகேசன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சிவகங்கை மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.